**சுருக்கம்**

அறிவிப்புகள் – 2021 – 2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு மாவட்ட அளவில் பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் விளையாட்டுப் போட்டிகளை 'கலைத் திருவிழா' என்ற பெயரில் நடத்துவதற்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2))த்துறை**

**அரசாணை (நிலை) எண்.66** **நாள் 18.11.2021**

**பிலவ, கார்த்திகை 2**

**திருவள்ளுவர் ஆண்டு 2052**

**படிக்கப்பட்டது:**

பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடித எண்.பி2/ 5637/2021, நாள் 21.09.2021.

**ஆணை:**

2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல "விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் படைப்பாற்றல் மற்றும் தனித்திறனை ஊக்குவிக்கும் வகையில் விடுதி மாணவ, மாணவியருக்கு பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் ('கலைத் திருவிழா' என்ற பெயரில்) 3 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் நடத்தப்படும்" என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, பெறப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கருத்துருவில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலப் பள்ளி/கல்லூரி விடுதிகளில் தங்கிக் கல்வி பயிலும் மாணவ/மாணவியர் புத்தகக் கல்வி மட்டும் அல்லாமல் பேச்சாற்றல், படைப்பாற்றல் மற்றும் விளையாட்டு ஆகியவற்றில் சிறந்து விளங்கிட ஏதுவாக அவர்களுக்கு பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டி ஆகிய இலக்கிய போட்டிகளையும், ஓட்டப்பந்தயம் மற்றும் நீளம் தாண்டுதல் ஆகிய விளையாட்டுப் போட்டிகளையும் மாவட்ட அளவில் நடத்தி, முதல் மூன்று இடங்களை பெறும் மாணவ/ மாணவியருக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கலாம் எனத் தெரிவித்துள்ளார். இப்போட்டிகளை பள்ளி மாணவர் மற்றும் மாணவியருக்கென தனியாகவும், கல்லூரி மாணவர் மற்றும் மாணவியருக்கென தனியாகவும் நடத்தலாம் எனவும் மேலும் வெற்றியாளர்களை தேர்ந்தெடுத்து பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்க

i) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ii) மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் iii) அரசு கல்லூரி பேராசிரியர் ஒருவர் ஆகியோர் அடங்கிய தேர்வுக் குழுவை அமைக்கவும் பரிந்துரைத்துள்ளார்.

3. இத்திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு ஒரு மாவட்டத்திற்கு ரூ.10,000/- வீதம் 38 மாவட்டங்களில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலப் பள்ளி / கல்லூரி விடுதிகளில் தங்கிக் கல்வி பயிலும் மாணவ/ மாணவியருக்கு போட்டிகள் நடத்தி பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்குவதற்கு தேவைப்படும் மொத்த செலவினமான ரூ.3,80,000/-க்கு நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. இக்கருத்துரு அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டு, இத்துறையின் மூலம் இயங்கும் 1354 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலப் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு மாவட்ட அளவில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் விளையாட்டுப் போட்டிகளை 'கலைத் திருவிழா' என்ற பெயரில் நடத்துவதற்கும், விளையாட்டு போட்டிகள் மூலம் வேலைவாய்ப்பு பெறுவது குறித்து மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் மூலம் விடுதி மாணவ/மாணவியரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் மற்றும் அரசு கல்லூரி பேராசிரியர் ஒருவர் உள்ளடக்கிய தேர்வுக் குழுவை அந்தந்த மாவட்ட அளவில் அமைத்து, வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கிட ஒரு மாவட்டத்திற்கு ரூ.10,000/- வீதம், 38 மாவட்டங்களுக்கு தேவைப்படும் மொத்த செலவினமான ரூ.3,80,000/-க்கு (ரூபாய் மூன்று இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225 - ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 03 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 277- கல்வி - மாநிலச் செலவினங்கள் - AA - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள் - 359 - பரிசுகளும் வெகுமதிகளும் - 01 - பரிசுகளும் வெகுமதிகளும்"

(IFHRMS த.தொ.கு: 2225-03-277-AA-35901)

6. மேலே பத்தி 4-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.3,80,000/- 2021-2022 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் அவர்களுக்கு

அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2021–2022 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி [பி, மிபி (ம)சி.ந]த்துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.49980/ நிதி (பி, மிபி (ம) சிந)/2021, நாள் 18.11.2021–ல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 857 (எண்ணூற்று ஐம்பத்து ஏழு)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆ. கார்த்திக்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை– 5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை– 5.
சிறுபான்மையினர் நல இயக்குநர், சென்னை – 5.
இணை இயக்குநர் (கள்ளர் சீரமைப்பு), மதுரை.
மாநில கணக்காயர், சென்னை–18. (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை– 1), சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை– 2), சென்னை–18 (பெயரில்).
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து கருவூல அலுவலர்கள்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.

<u>நகல்</u> :
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலன்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச்செயலர், சென்னை–9.
நிதி (பி, மிபி மற்றும் சிந)/வ.செ.பொது I/வ.செ.பொது II/வ.வ.I)த்துறை, சென்னை – 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந3)த்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உபரி

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

வா. சுதா 18/11/2021
**பிரிவு அலுவலர்**
18/11/2021